

# From Bishop's Desk...

**December 2011**

***"And the Word was made flesh;***
***He had his tent pitched among us." (Jn 1: 14)***

***My Dear Fathers/Brothers/Sisters,***

It is Christmas time again and preparations are in full swing for the celebration of the greatest feast in our Christian tradition. Every year we remember and celebrate the great **mystery of Incarnation – the mystery of God becoming a human person and sharing our human condition.** As far as we are concerned God becoming a human being is a unique salvific event – an event that gives us life and liberation. But for God it is an **act of Kenosis – a self–emptying**. St. Paul puts it so beautifully and powerfully in his letter to the Philippians:

**"Though he was in the form of God**
**He did not regard equality with God**
**As something to be exploited,**
**But emptied himself,**
**Taking the form of a slave,**
**Being born in human llikeness…" (Phil 2: 6,7)**

It is very easy to forget this dimension of self–emptying and self–giving amidst all our jubilations and sharing of gifts. Let us not lose sight of the essence of our celebration. In our present social context characterized by injustice, inequality, discrimination, corruption and

abject poverty the Incarnation of Jesus assumes greater significance. Just as Jesus pitched his tent among the poor, identified himself with them and was committed to their total liberation we are also called to become one with the poor and work for their liberation. The Son of God who emptied himself in order that we may have life and have it to the full (cf Jn 10:10) challenges us to empty ourselves – to give ourselves to the people – especially to the poor and the marginalized. The world will remain unchanged – the poor will continue to suffer injustice and exploitation until you and I decide to be broken – to commit ourselves for the life and liberation of our brothers and sisters. Have a meaningful Christmas!





**+ Rt. Rev. Dr. A. Neethinathan**
**Bishop of Chingleput**

## திருப்பணியாளர்கள் - பணியமர்த்துதல்

இயேசு கிறிஸ்து விட்டுச்சென்ற பணியை திருமுழுக்கு பெற்ற அனைவரும் இணைந்து செய்ய வேண்டும் என்பதில் பொதுநிலையினரும் ஒரு சிறப்பான இடத்தை வகிக்கின்றனர். பொதுநிலையினரின் திருத்தூதுப்பணி பற்றிய விதித்தொகுப்பு 1965 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 18 ஆம் நாள் வெளியிடப்பட்டது. அதற்கேற்ப நமது செங்கல்பட்டு மறைமாவட்டத்தில் திருத்தூது பணிபுரிய ஏழு திருப்பணியாளர்கள் கடந்த நவம்பர் திங்கள் 5 ஆம் நாள் சனிக்கிழமை காலை 11.30 மணிக்கு அச்சிறுப்பாக்கம் மழைமலை மாதா திருத்தலத்தில் நமது ஆயர் அவர்களால் பணியமர்த்தப்பட்டனர்.

| திருப்பணியாளர்கள் | பங்கு |
|---|---|
| திரு.எஸ். ரபேல் | தர்காஸ்ட் |
| திரு. ரூபன் | கூடுவாஞ்சேரி |
| திரு. டோமினிக் | கூடுவாஞ்சேரி |

| | |
|---|---|
| திரு. டானியேல் கணேஷ் | பாலவாக்கம் |
| திரு. திவ்ய நாதன் | பாலவாக்கம் |
| திரு. ஜெயபால் | செங்கல்பட்டு |
| திரு. எஸ். அந்தோணி | குரோம்பேட்டை |

இத்திருப்பணியாளர்கள் எழுவரும் தமிழக ஆயர் பேரவையின் தமிழக பொதுநிலையினர் பணிக்குழு ஏற்பாடு செய்த இரண்டாண்டு பயிற்சியினை சீராய் முடித்து, அதற்கான சான்றிதழ்களை பெற்றவர்கள். இப்பயிற்சியின் மூலம் தங்கள் பங்குத்தந்தையர்களுக்கு அருட்பணிகளில் உதவிடவும், பங்கு மக்கள் வழிபாடுகளை ஆலங்களில் அர்த்தமுள்ள வகையில் மேற்கொள்ள துணைபுரியவும், பொதுநிலையினரை ஆன்மீக காரியங்களில் ஒருங்கிணைக்கவும் அழைப்பு பெற்றுள்ளனர். நமது மறைமாவட்டத்தில் இத்திருப்பணியாளர்கள் ஆயரோடு இணைந்து திருப்பணியின் கருவிகளாக செயல்பட இவர்களை வாழ்த்துவோம், இவர்களுடைய பணி சிறக்க செபிப்போம்.



## OFFICIAL NOTIFICATIONS

| | |
|---|---|
| 03.12.11 | Feast of St. Francis Xavier |
| 08.12.11 | Solemnity of Immaculate Conception of B.V.M |
| 25.12.11 | Christmas Day - Solemnity of Nativity of our Lord<br>MASS FOR THE PEOPLE |
| 26.12.11 | Saint Stephen Proto - Martyr Feast |
| 27.12.11 | Saint John AP., Evan., Feast |
| 28.12.11 | Feast of the Holy Innocents |
| 30.12.11 | Feast of the Holy Family |
| 01.01.12 | New Year Day & Solemnity of Mary Mother of God |

# மேய்ப்புப்பணியக செய்திகள்

## மறைமாவட்ட பள்ளி ஆசிரியர்களின் பங்களிப்பு தொகை விவரம்

| பள்ளி/இடம் | பங்களிப்பு தொகை |
|---|---|
| புனித தெரசாள் மகளிர் மேல்நிலைப்பள்ளி, பல்லாவரம் | 47,550.00 |
| புனித சூசையப்பர் மெட்ரிக்குலேஷன் பள்ளி, வாலாஜாபாத் | 4,500.00 |
| புனித சூசையப்பர் தொடக்கப்பள்ளி, கோமன்சேரி | 1, 450.00 |
| ஆர்.சி. மேல்நிலைப்பள்ளி, செண்டிவாக்கம் | 2,800.00 |
| புனித சூசையப்பர் பள்ளி, வாலாஜாபாத் | 4,500.00 |
| புனித சூசையப்பர் பள்ளி, கோவளம் | 16,527.00 |
| புனித ஜான் நர்சரி & பிரைமரி பள்ளி, தாம்பரம் | 300.00 |
| புனித அன்னாள் மெட்ரிக்குலேஷன் பள்ளி, பெருங்களத்தூர் | 300.00 |
| ஆர்.சி. தொடக்கப்பள்ளி, ஆர்.என். கண்டிகை | 2,400.00 |
| புனித சூசையப்பர் மெட்ரிக்குலேஷன் பள்ளி, மேலக்கோட்டையூர் | 3,130.00 |
| கிறிஸ்து அரசர் நடுநிலைப்பள்ளி, தாம்பரம் | 6,750.00 |
| குழந்தை தெரசாள் மெட்ரிக்குலேஷன் பள்ளி, பள்ளிக்கரணை | 4,000.00 |
| புனித சூசையப்பர் மேல்நிலைப்பள்ளி, தாம்பரம் | 11,934.00 |
| மேரியன் தொடக்கப்பள்ளி, புனித தோமையார் மலை | 9,200.00 |
| மேரியன் மெட்ரிக்குலேஷன் மேல்நிலைப்பள்ளி, புனித தோமையார் மலை | 7,400.00 |
| புனித அசிசி மெட்ரிக்குலேஷன் மேல்நிலைப்பள்ளி, இராமாபுரம் | 1,500.00 |
| | **1,24,241.00** |

**மொத்தத் தொகை ரூ.1,44,461/-**

**அருட்பணி. ஜார்ஜ் ஸ்டீபன்**
**இயக்குநர்**

# திருத்தொண்டர்கள் கள ஆய்வு பணி

செங்கை மறைமாவட்ட திருத்தொண்டர்களாகிய ஜோசப், பால்ராஜ், பிரபு தாஸ், ஸ்டேன்லி சின்ன துரை, தாமஸ் மற்றும் வின்சென்ட் ராஜ் ஆகிய நாங்கள் ஆறு பேர் எங்களது திருத்தொண்டர் களப்பணியை தொடங்குவதற்கு முன்பாக, அக்டோபர் 28 ம் தேதி ஆயர் இல்லத்தில் முதன்மை குரு அருட்பணி. அம்புரோஸ், செயலக செயலர் அருட்பணி. லூயிஸ் ராயர், மேய்ப்புப்பணி நிலைய இயக்குநர் அருட்பணி. ஜார்ஜ் ஸ்டீபன் ஆகியோர் ஒரு நாள் கருத்தமர்வை வழங்கினார்கள். அதனைத்தொடர்ந்து ஏழு நாட்கள் (அக்டோபர் 31 முதல் நவரம்பர் 6 வரை) ஆலந்தூரிலும், மூன்று நாட்கள் ( நவம்பர் 7 முதல் 9 வரை) சோகண்டியிலும், இரண்டு நாட்கள் (நவம்பர் 11 மற்றும் 12 வரை) கூத்தவாக்கம் பங்கிலும் இல்லங்களை சந்தித்து புதிய முறை மாதிரி அன்பிய கூட்டங்களை நடத்தினோம்.

பின்னர் பத்து நாட்கள் (நவம்பர் 14 முதல் 23 வரை) மகாலட்சுமி நகர் பங்கில் தங்கி வீடுகளை சந்தித்தோம். இந்த ஒரு மாத கால அனுபவம் எங்களது குருத்துவ பணிவாழ்வு பயிற்சிக்கு உறுதுணையாக அமைந்தது. இந்த நாட்களில் எங்களுக்கு பல்வேறு விதத்தில் உதவியாயிருந்த அருட்பணியாளர்கள் அருள்ராஜ், தேவசியா, மரிய டல்லஸ் (முப்பணி நிலையம், திண்டிவனம்) மற்றும் மறைமாவட்ட பணிக்குழுக்களின் களப்பணியாளர்கள் அனைவருக்கும் நன்றி.

இத்தகைய வாய்ப்பை வழங்கிய நமது ஆயர் மேதகு நீதிநாதன் அவர்களுக்கும் மறைமாவட்ட முதன்மைகுரு அருட்பணி. அம்புரோஸ் அவர்களுக்கும், எம்மை வழிநடத்திய மேய்ப்புப்பணி நிலைய இயக்குநர் அருட்பணி. ஜார்ஜ் ஸ்டீபன் அவர்களுக்கும் மற்றும் பங்குத்தந்தையர்கள் அருட்பணி. பேட்ரிக், அருட்பணி. லூக்காஸ், அருட்பணி. ஆண்ட்ரு SDM மற்றும் ஆன்டனி ஜேக்கப் ஆகியோருக்கும் எமது நன்றி.

**திருத்தொண்டர்கள்**
**செங்கை மறைமாவட்டம்**

# அன்பியம்

## பங்கு செய்திகள்

### கூத்தவாக்கம் பங்கு

அக்டோபர் 30 ம் தேதி ஞாயிற்றுக்கிழமை காலை கூத்தவாக்கம் பங்கில் திருப்பலிக்கு பிறகு அன்பிய அறிமுக பயிற்சி நடைபெற்றது. இதில் அன்பியத்தைப்பற்றியும், இக்காலக்கட்டத்தில் அதன் அவசியம் பற்றியும், அதனால் வரும் நன்மைகள் பற்றியும் விளக்கி கூறப்பட்டது.

### வேடந்தாங்கள் பங்கு

அக்டோபர் 30 ம் தேதி ஞாயிற்றுக்கிழமை காலை திருப்பலிக்கு பிறகு வேடந்தாங்கள் பங்கில் பங்குபேரவை மற்றும் அன்பிய பொறுப்பாளர்கள் 18 பேருக்கு அவர்களது பணிகள் பற்றியும், அன்பியங்களின் செயல்பாடுகள், அதன் முக்கிய பண்புகள், இன்றைய திருச்சபையில் பொதுநிலையினரின் பணிகள் பற்றியும் எடுத்துரைக்கப்பட்டது. பொறுப்பாளர்கள் அனைவரும் பங்கின் அனைத்து செயல்பாடுகளிலும் ஒருங்கிணைந்து செயல்படுவதாக தீர்மானித்தனர். அதைத் தொடர்ந்து பங்குபேரவை கூட்டம் பங்குத்தந்தை தலைமையில் நடைபெற்றது.

### ஆலந்தூர் பங்கு

அக்டோபர் 30 ம் தேதி முதல் நவம்பர் 6 ம் தேதி வரை ஆலந்தூர் பங்கில் நமது திருத்தொண்டர்கள் 6 பேர், அன்பிய களப்பணியாளர்களுடன் இணைந்து குடும்பங்களை சந்தித்தனர். ஒவ்வொரு நாளும் வீடுகள் மந்திரிக்கப்பட்டு மாதிரி அன்பிய கூட்டம் நடத்தப்பட்டது. இதில் புதிய முறையில் திருச்சபை என்ற தலைப்பில் கருத்துரை வழாங்கப்பட்டது. மேலும் அன்பிய தேர்தலுக்கான தயாரிப்புகள் குறித்து விவாதிக்கப்பட்டது.

### சோகண்டி பங்கு

நவம்பர் 7 ம் தேதி முதல் 9 ம் தேதி வரை சோகண்டி பங்கில் நமது திருத்தொண்டர்கள் 6 பேர், அன்பிய கலப்பணியாளர்களுடன் இணைந்து குடும்பங்களை சந்தித்தனர். வீடுகளை மந்தரித்து, மாதிரி அன்பிய கூட்டம் நடத்தி, அன்பியம் மற்றும் அதன் தேவைகள் குறித்து எடுத்துக்கூறினர். நவம்பர் 9 ம் தேதி மாலை 7.00 மணிக்கு

மேய்ப்புப்பணி நிலைய இயக்குநர் அருட்பணி. ஜார்ஜ் ஸ்டீபன் அவர்கள் திருப்பலி நிறைவேற்றி அன்பியத்தைப்பற்றி விளக்கமாக எடுத்துரைத்தார்.

***கூத்தவாக்கம் பங்கு***

நவம்பர் 11 ம் தேதி வெள்ளிக்கிழமை கூத்தவாக்கம் பங்கில் நமது திருத்தொண்டர்கள் எல்லா குடும்பங்களையும் சந்தித்து, வீடுகளை மந்தரித்து, மாதிரி அன்பிய கூட்டத்திற்கு தயார் செய்தனர். நவம்பர் 12 ம் தேதி சனிக்கிழமை குடும்ப அட்டை இல்லாதவர், அருட்சாதனங்களை பெறதாவர்களின் விவரங்களை சேகரித்து அதற்கான தயாரிப்புகளை மேற்கொண்டனர். பின் அன்று இரவு 6 அன்பியத்திலும் அன்பிய மாதிரி கூட்டம் நடைபெற்றது.

***ஆலந்தூர் பங்கு***

நவம்பர் 13 ம் தேதி ஞாயிற்றுக்கிழமை மாலை 6.00 மணிக்கு ஆலந்தூர் பங்கில் 2 அன்பியங்களை சந்தித்து மாதிரி கூட்டம் நடத்தி அடுத்து வரும் தேர்தலை பற்றி எடுத்துக் கூறினர்.

***மகாலட்சுமி நகர் பங்கு***

நவம்பர் 14 ம் தேதி முதல் 19 ம் தேதி வரை மகாலட்சுமி நகர் பங்கில் நமது திருத்தொண்டர்கள் பங்குத்தந்தை அருட்பணி. பேட்ரிக் அவர்களின் ஆலோசனையின்படியும், மேய்ப்புப்பணி நிலைய இயக்குநர் அருட்பணி. ஜார்ஜ் ஸ்டீபன் அவர்களின் வழிநடத்துதலின்படியும் பங்கின் அனைத்து குடும்பங்களையும் சந்தித்து, வீடுகள் மந்தரிக்கப்பட்டன.

**அருட்பணி. ஜார்ஜ் ஸ்டீபன்**
**செயலர்**

## மறைக்கல்வி பணிக்குழு

நம்மறைமாவட்டத்தில் பள்ளிகளில் பணிபுரிகின்ற ஆசிரியர்களுக்கான இரண்டாம் கட்ட ஒருநாள் ஆண்டு தியானம் நவம்பர் 12 ம் தேதி புனித தோமையார் மலை, மேரியன் மெட்ரிக் பள்ளி மற்றும் தாம்பரம், புனித பாத்திமா அன்னை ஆலய வளாகத்தில் நடைபெற்றது. இதில் புனித தோமையார் மலையில் 90 ஆசிரியர்களும், தாம்பரத்தில் 330 ஆசிரியர்களும் பங்கேற்று பயன்பெற்றனர். இத்தியானத்தை புனித

தோமையார் மலையில் **அருட்பணி. மரிய டல்லஸ் (மாநில விவிலிய பணிக்குழு செயலர்)**, தாம்பரத்தில் **அருட்பணி. பிரான்சிஸ் சேவியர் CMF** அவர்களும் வழிநடத்தினர்.

நவம்பர் 26 ம் தேதி பாலவாக்கம் மறைவட்டத்திற்கான ஆசிரியர்கள் தியானம் பாலவாக்கம் அந்தோணியார் ஆலய வளாகத்தில் நடைபெற்றது. இதில் 82 ஆசிரியர்கள் கலந்து கொண்டு பயன் பெற்றனர். **இத்தியானத்தை அருட்பணி. செபாஸ்டியன், மாநில மறைக்கல்வி பணிக்குழு செயலர்** அவர்கள் வழிநடத்தினார்.

தியானம் நல்ல முறையில் நடைபெற பெரிதும் உதவியாக இருந்து தேவையான உதவிகளை செய்து தந்த புனித தோமையார் மலை பங்குத்தந்தை அருட்பணி. பாக்கிய ரெஜிஸ் அவர்களுக்கும், தாம்பரம் பங்குத்தந்தை அருட்பணி. அருள்ராஜ் அவர்களுக்கும், பாலவாக்கம பங்குத்தந்தை அருட்பணி. இயேசு அந்தோணி அவர்களுக்கும், உதவி பங்குத்தந்தையர்களுக்கும், அப்பள்ளிகளின் தலைமை ஆசிரியர்களுக்கும் மற்றும் இத்தியானத்தில் முழு பங்கேற்புடன் கலந்துகொண்ட ஆசிரியர் பெருமக்களுக்கும் மிகுந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம்.

**அருட்பணி. ஜார்ஜ் ஸ்டீபன்**
**செயலர்**

# இறையழைத்தல் பணியகம்

## இறையழைத்தல் தினம் – 2011

2009 ம் ஆண்டு குருக்கள் ஆண்டினை முன்னிட்டு நமது மறைமாவட்டத்தில் துவங்கப்பட்ட இறையழைத்தல் தினம் மூன்று ஆண்டுகளாக சிறப்பாக நடைபெற்று வருகிறது. அக்டோபர் 2 ம் தேதி செங்கல்பட்டு மறைவட்டத்திலும் (48 பேர் பங்கேற்றனர்), 9 ம் தேதி பாலவாக்கம் மறைவட்டத்திலும் (56 பேர் பங்கேற்றனர்), 16 ம் தேதி மதுராந்தகம் மறைவட்டத்திலும் (98 பேர் பங்கேற்றனர்), 23 ம் தேதி தாம்பரம் மறைவட்டத்திலும் (23 பேர் பங்கேற்றனர்) நடைபெற்றது. இதில் 9 ம் வகுப்பு முதல் 12 ம் வகுப்பு வரை பயிலும் கத்தோலிக்க மாணவ மாணவிகள் கலந்துகொண்டு இறையழைத்தல் குறித்த தெளிவுகளை

பெற்றுக்கொண்டதோடு, பலர் இறையழைத்தலுக்கான தங்கள் விருப்பத்தினை தெரிவித்தனர்.

இத்தினத்தில் **“எல்லாருக்கும் மறைக்கல்வி”** என்கின்ற தலைப்பில் மறைக்கல்வியின் பல்வேறு பரிமாணங்களை நமது மேய்ப்புப்பணி நிலைய இயக்குநர் அருட்பணி. ஜார்ஜ் ஸ்டீபன் அவர்கள் விளக்கி கூறினார். விவிலியத்தில் இறையழைத்தல் என்ற சிந்தனையை அடிப்படையாக வைத்து கோவளம் மறைவட்ட முதன்மைகுரு அருட்பணி. சார்லஸ் அவர்கள் சிறப்புரையாற்றினார். மேலும் இளம்குருமட மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள், விளையாட்டு போட்டிகள் மற்றும் பாடல்போட்டிகள் நடத்தப்பட்டு பரிசுகளும் வழங்கப்பட்டது.

**அருட்பணி. ஜான் குரியன்**
**செயலர்**

## குடும்பநலப் பணிக்குழு



## பங்குத்தந்தையர்களின் கவனத்திற்கு

2012, ஜனவரி 1 ம் தேதி முதல் ஞாயிற்றுக்கிழமையாக இருப்பதால் அன்று நடைபெற வேண்டிய திருமண தயாரிப்பு வகுப்புகள் ஜனவரி 8 ம் தேதி, ஞாயிற்றுக்கிழமையும், ஜனவரி 14 ம் தேதி சனிக்கிழமையும் மற்றும் 15 ம் தேதி ஞாயிற்றுக்கிழமையும் நடைபெறும் என தெரிவித்துக்கொள்கிறோம்.

**ஜனவரி 8,14,15 தேதிகளில் வரவும்**

திருமணத் தயாரிப்பு வகுப்புகளுக்கு வருபவர்கள் முன் பதிவு செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

| முன்பதிவு செய்ய தொடர்புக்கு | |
|---|---|
| **பல்லாவரம்** | திரு. ஜான் மார்டீன் 9962177440 /9941847871 |
| **செங்கல்பட்டு** | திரு. பால்ராஜ் 9445508387/044-27493341 |

**அருட்பணி. தாமஸ் பிரேம்குமார்**
**செயலர்**

# இளைஞர் பணியகம்

## பங்களவில்

அக்டோபர் 23 ம் தேதி துரைப்பாக்கம் சகாய அன்னை ஆலய இளைஞர்களுக்கு ஒருநாள் தியானம் சிறப்பாக நடைபெற்றது.

அக்டோபர் 30 ம் தேதி மேடவாக்கம் சகாய அன்னை ஆலய இளைஞர்கள் மற்றும் பள்ளிக்கரணை குழந்தை இயேசு அருட்தல இளைஞர்களுக்கான அரைநாள் சிறப்பு கருத்தரங்கு மறைமாவட்ட செயலர் அருட்பணி. K.C. அமலோற்பவ ராஜ் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. இதில் 70 இளைஞர்கள் கலந்துகொண்டு பயன்பெற்றனர்.

## மறைவட்ட அளவில்

நவம்பர் 20 ம் தேதியன்று பாலவாக்கம் மறைவட்ட இளைஞர்களுக்கான கலைப்போட்டி பள்ளிக்கரணை குழந்தை இயேசு ஆலயத்தில் நடைபெற்றது.

## மறைமாவட்ட அளவில்

அக்டோபர் 22 மற்றும் 23 தேதிகளில் இளைஞர்களுக்கான மனித உரிமைப்பயிற்சி பெருங்குடி புனித பத்தாம் பத்திநாதர் ஆலயத்தில் நடைபெற்றது. இதில் 69 இளைஞர்கள் கலந்துகொண்டு பயன்பெற்றனர்.

நவம்பர் 6 ம் தேதி செங்கல்பட்டு புனித சூசையப்பர் மறைமாவட்ட தலைமை ஆலய இளைஞர்களால் மறைமாவட்ட அளவிலான திறன்வளர்ப்பு போட்டிகள் நடத்தப்பட்டது.

## மாநில அளவில்

மாநில அளவில் இளைஞர்களுக்கான மனித உரிமைப்பயிற்சி நவம்பர் 18 ம் தேதி முதல் 20 ம் தேதி வரை திருச்சியில் உள்ள கருமண்டபத்தில் நடைபெற்றது. இதில் நமது மறைமாவட்டத்தை சேர்ந்த 6 இளைஞர்கள் கலந்துகொண்டு பயன்பெற்றனர்.

## பங்கு சந்திப்புகள்

| தேதி | பங்கு | ப.கொ.எ |
|---|---|---|
| 30.10.2011 | சகாய அன்னை ஆலயம், மேடவாக்கம் | 76 |
| 13.11.2011 | புனித சூசையப்பர் ஆலயம், பெருங்கோழி | 17 |
| 20.11.2011 | குழந்தை இயேசு ஆலயம், பள்ளிக்கரணை | 85 |

# இளம் கிறித்தவ மாணாக்கர்/இளம் மாணாக்கர் இயக்கம்

## மறைமாவட்ட அளவில்

நவம்பர் 11 ம் தேதி இளம் கிறித்தவ மாணாக்கர்/இளம் மாணாக்கர் இயக்க நிறுவனர் விழா மற்றும் திறமைக்கு ஒரு சவால் போட்டிகளுக்கான பரிசளிப்பு விழா நமது மறைமாவட்ட ஆயர் மேதகு நீதிநாதன் அவர்களின் தலைமையில் சிறப்பாக கொண்டாடப்பட்டது. இதில் 25 க்கும் மேற்பட்ட பள்ளிகளில் இருந்து மாணவ மாணவிகள் பங்கு கொண்டனர். மாணவர்களை உற்சாகப்படுத்திய தலைமை ஆசிரியர்/தாளாளர் மற்றும் ஆசிரிய பெருமக்களுக்கு நன்றி.

**அருட்பணி. K.C. அமலோற்பவ ராஜ்**
**செயலர்**

## தலித் பணியகம்

நவம்பர் 20 ம் தேதி தலித் பணியகத்தின் **‘பொதுக்குழு கூட்டம் – 2011’** மேய்ப்புப்பணி நிலையத்தில் சிறப்பாக நடைபெற்றது. இக்கூட்டத்தில் 120 பேர் கலந்து கொண்டனர். இதில் மாநில செயலர் அருட்பணி. தேவசகாயராஜ் கலந்து கொண்டு, உள்ளாட்சி தேர்தலில் வெற்றி பெற்ற தலித்



கிறித்தவர்களுக்கு நமது ஆயர் சார்பாக சிறப்பு செய்தார். மறைமாவட்டத்திற்கான செயற்குழு உறுப்பினர்களும், மறைமாநிலத்திற்கான பொதுக்குழு உறுப்பினர்களும் தேர்வு செய்யப்பட்டனர்.



செங்கல்பட்டு மறைவட்டத்தில் 7 பங்குகளும், கோவளம் மறைவட்டத்தில் 4 பங்குகளும், தாம்பரம் மறைவட்டத்தில் 2 பங்குகளும், காஞ்சிபுரம் மறைவட்டத்தில் 2 பங்குகளும், மதுராந்தகம் மறைவட்டத்தில் 5 பங்குகளும், செய்யூர் மறைவட்டத்தில் 5 பங்குகளும், பள்ளியகரம் மறைவட்டத்தில் 5 பங்குகளும், பல்லாவரம் மறைவட்டத்தில் 3 பங்குகளும், தோமையார் மலை மறைவட்டத்தில் 3 பங்குகளும் மட்டுமே கலந்து கொண்டன. இன்னும் 37 பங்குகளும், பாலவாக்கம் மறைவட்டத்திலிருந்து எந்த பங்கும் கலந்து கொள்ளவில்லை என்பது வருத்தத்திற்குரியது.

நவம்பர் 26 -27 ம் தேதிகளில் **'மாணவர் திறன் வளர் பயிற்சி முகாம்'** மேய்ப்புப்பணி நிலையத்தில் நடைபெற உள்ளது.

கிறித்தவ அருந்ததியர் உரிமை இயக்கத்திலிருந்து ஒருங்கிணைப்பும், கள சந்திப்பும் நடைபெற்றது. திரு. சவரிமுத்து இதில் கலந்து கொண்டார்.

கிறித்தவ துரும்பர் மாணவ மாணவிகளை ஊக்கப்படுத்தும் விதத்தில் அச்சிறுப்பாக்கம் மழைமலை மாதா அருள்தலத்தில் ஆயர் தலைமையில் வாழ்வு வலுவாக்கம் மையத்தின் ஆண்டு விழாவில் நமது ஆயர் அவர்கள் கல்வி நிதியை உறுதியளித்தார். இதில் மாநில செயலர் அருட்பணி. தேவசகாயராஜிம், மறைமாவட்ட செயலரும் கலந்து கொண்டனர்.

**அருட்பணி. ஆரோக்கிய ரேமண்ட்**
**செயலர்**

## தொழிலாளர் பணியகம்

வீட்டு வேலை செய்யும் கிறித்தவ மகளிரை அமைப்பாக்கும் முயற்சிக்கு பங்குத்தந்தையரோ அல்லது அருட்சகோதரிகளோ அத்தகைய மகளிர் இருப்பின் தொழிலாளர் பணியகத்திற்கு தொடர்புபடுத்தும்படி கேட்டுக்கொள்கிறோம்.

அக்டோபர் 30 ம் தேதி ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணியளவில் மைசூர் மாவட்ட கிறித்தவ தொழிலாளர் இயக்க உறுப்பினர்களுக்கும் செங்கை மறைமாவட்ட கிறித்தவ தொழிலாளர் உறுப்பினர்களுக்கும் ஒருங்கிணைந்த கூட்டம் நடைபெற்றது. மைசூர் மறைமாவட்ட தலைவர் திரு. ஆரோக்கியதாஸ், செயலர் பேட்ரிக் மற்றும் செங்கை

மறைமாவட்ட தலைவர் திரு. அந்தோணி ஆனந்தராஜ் ஆகியோர் இயக்க செயல்பாடுகள் குறித்து உறுப்பினர்களிடம் கலந்துரையாடினர். இந்நிகழ்வில் தேசிய இயக்க தலைவர் திரு. ராஜமணி மற்றும் தேசிய இயக்க இணை செயலர் திரு. ராக்கி கிரின் அவர்களும் பங்கேற்று இயக்க செயல்பாடுகள் குறித்து பேசினார். மைசூர் கத்தோலிக்க நிலைய இயக்குநர் தந்தை அவர்கள் ஆசியுரை வழங்கி நிகழ்வில் பங்கேற்றார். இறுதியில் திருமதி. ஜெய சாந்தி (மடிப்பாக்கம்) பெண்கள் கிளை தலைவர் நன்றி கூறினார். இறுதி செபத்துடன் கூட்டம் நிறைவு பெற்றது. இதில் 54 உறுப்பினர்கள் பங்கேற்றனர்.

**அருட்பணி. ஆரோக்கிய ரேமண்ட்**
**செயலர்**

## நற்செய்தி பணியகம்

நவம்பர் 13 ம் தேதி **‘பவுல் அடியாரின் மறைக்கல்வி நடை’** எனும் தலைப்பில் நற்செய்தி பணியாளருக்கு பவுலின் பாடங்களில் பயிற்சி பெற்ற சகோதரர்கள் லியோ, பெர்னார்ட், கபிரியேல் அவர்களால் வகுப்பு எடுக்கப்பட்டது இதன் சிறப்பு. இதில் 35 க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். மறைபரப்பு ஞாயிறு காணிக்கையாக ரூ.2300 நற்செய்தி பணியாளர்களால் உவந்தளிக்கப்பட்டது பாராட்டிற்குரியது.

நற்செய்தி பணியாளர்களின் கட்டுரைகள் மலை முழக்கம் மற்றும் மலையருள் இதழ்களில் பதிப்புக்காக அனுப்பப்பட்டுள்ளன.

**அருட்பணி. ஆரோக்கிய ரேமண்ட்**
**செயலர்**

## HOLY FATHER’S PRAYER INTENTIONS FOR DECEMBER 2011

**GENERAL:** That the nations of the earth, through knowledge and mutual respect, may grow in harmony and peace.

**MISSION:** The children and young people may be messengers of the Gospel and that their dignity may always be respected and preserved from all violence and exploitation.

# FROM THE PROCURATOR'S DESK

## SCHOLARSHIPS ISSUED FOR THE ACADEMIC YEAR 2011 - 2012

**Scholarship issued up to October 2011 Rs.8,56,000.00**

### October (2011)

B.E.

| S.No | App.No | Name | Parish | Amount |
|---|---|---|---|---|
| 052 | 26 | Thamizharasi P. (N) | Acharapakkam | 5000.00 |
| 053 | 166 | Edwin Moses A. (N) | Cheyyur | 5000.00 |
| 054 | 280 | Yuvaraj A. ® | Pappanallur | 5000.00 |
| | | | **Total** | **15,000.00** |

DIP

| S.No | App.No | Name | Parish | Amount |
|---|---|---|---|---|
| 026 | 365 | Gowthami T. (N) | Kolapakkam | 3000.00 |
| 027 | 48 | Vimbal Prasath Y. (N) | Malligapuram | 3000.00 |
| 028 | 19 | Tamilvanan A. (N) | Mambakkam | 3000.00 |
| 029 | 278 | Thangapragasam G. (N) | Pappanallur | 3000.00 |
| 030 | 198 | Arun Kumar A. ® | Pavunjur | 3000.00 |
| | | | **Total** | **15,000.00** |

DTE

| S.No | App.No | Name | Parish | Amount |
|---|---|---|---|---|
| 026 | 196 | Ashvini S. ® | Pavunjur | 5000.00 |
| | | | **Total** | **5,000.00** |

PG

| S.No | App.No | Name | Parish | Amount |
|---|---|---|---|---|
| 013 | 208 | Jancy Joseph. ® | Old Perungalathur | 2500.00 |
| | | | **Total** | **2,500.00** |

**UG**

| S.No | App.No | Name | Parish | Amount |
|---|---|---|---|---|
| 111 | 342 | Roselin V. ® | Ottanthangal | 2000.00 |
| 112 | 343 | Valli @ Maria Jesy (N) | Ottanthangal | 2000.00 |
| 113 | 65 | Mary Margreat S. ® | Palnellore | 2000.00 |
| 114 | 251 | Priyanga D. (N) | Valan Nagar | 2000.00 |
| 115 | 255 | Vijayaraj A. (N) | Valan Nagar | 2000.00 |
| | | | **Total** | **10,000.00** |

**GRAND TOTAL** **Rs. 9,03,500.00**

(N) New, (R) Renewal

**Rev. Fr. N. Louis Rayar**
Chancellor

**Rev. Fr. P. Charles**
Procurator

— — — — — — — — — — — — — — — —

## SURPLUS MASSES

**November 2011**

| | |
|---|---|
| Parish Priest, Perungalathur | 15,000.00 |
| Parish Priest, Tambaram | 39,950.00 |
| Parish Priest, Palavakkam | 15,200.00 |
| Parish Priest, Ramapuram | 7,300.00 |

## SEMINARIANS' FUND

**November 2011**

| | |
|---|---|
| Superior, St. Bridget's Convent | 500.00 |
| Mr. Moorthi Mathias, Kancheepuram | 3,000.00 |
| Parish Priest, Perungalathur | 3,000.00 |
| Christ King Convent, Tambaram | 6,000.00 |
| Mr. S.M. Lourdursamy, Madurantagam | 600.00 |
| Mr. Bernard and Family, Chingleput | 2,000.00 |
| Ms. Roseline, Tambaram | 2,000.00 |
| Sr. Superior, Carmel Villa, Selaiyur | 10,000.00 |
| Mrs. Victor Kanikai Mary, Tambaram | 500.00 |
| Mr. M. S. Abraham, Chennai | 100.00 |
| Mr. Amulraj Sundaraman, Maraimalai Nagar | 1,000.00 |
| Mrs. Violet Jacob, Chingleput | 1,000.00 |
| Ms. Rita Josephine, Chingleput | 1,500.00 |
| Parish Priest, Sholinganallur | 1,000.00 |
| Parish Priest, Old Perungalathur | 10,000.00 |
| Mrs. Laila Joseph, Tambaram | 1,500.00 |

## BISHOP NEETHINATHAN'S EDUCATION FUND

**November 2011**

| | |
|---|---|
| Mr. Irudayaraj, Padappai | 25,000.00 |
| Mr. Antony Francis, Pallavaram | 400.00 |

**Rev. Fr. P. Charles**
**Procurator**

## PRAYERFUL WISHES FOR A HAPPY BIRTHDAY



| | |
|---|---|
| Fr.Thomas Mundackal J. | 05.12.1942 |
| Fr.Charles P. | 08.12.1951 |
| Fr.Balraj T.S. | 10.12.1974 |
| Fr.John Benjamin L. | 12.12.1967 |
| Fr.Christy Raj A. | 13.12.1977 |
| Fr.Panimayakumar G. | 14.12.1955 |
| Fr.Joseph G.M. | 19.12.1935 |



| | |
|---|---|
| Fr.Augustine Devadoss S. | 19.12.1969 |
| Fr.Michael Suresh | 22.12.1978 |
| Fr.Balaswamy D. | 25.12.1942 |
| Fr.Athiruban M. | 26.12.1972 |
| Fr.Jacob Alex | 26.12.1976 |
| Fr.Tony Bharath K. | 02.01.1976 |
| Fr.Michael Raj A. | 04.01.1972 |

மெழுகுதிரிகள்
மேய்ப்புப்பணி
நிலையத்தில்
கிடைக்கும்

**கவனிக்க**



தற்போது மெழுகுத்திரிகளின்
விலை ரூ.140/-
ஆக அதிகரித்துள்ளது

